IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.151/2020

DEPOSITION OF WITNESS P.W.7

| | | |
|---|---|---|
| NAME | : | VINAYAGAM |
| FATHER'S NAME | : | DURAISAMI |
| VILLAGE | : | MOTTUR |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 28th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மோட்டூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பரமராமி டூ குடியாத்தம் ரோட்டில் உள்ள எனது நிலத்தில் இருந்தபோது விபத்து சம்பந்தமாக விசாரணை செய்து போலீசார் பார்வை மசகர் மற்றுமு் மாதிரி வரைபடம் வரைந்து தயார் செய்தார்கள். நானும், பாலாஜி என்பவரும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

-

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை எந்த தேதியில் விசாணை செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்து எவ்வளவு நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 10, 20 நாட்கள் கழித்து விசாரணை செய்திருப்பார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. நான் மாதிரி வரைபடம் வரைந்த தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வேறு எந்த தாளிலும் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். வேறு எந்த எழுதிய தாளிலும் என்னிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் தான் பாலாஜியும் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான்.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.